**தீபகற்ப மலேசிய வனவிலங்கு மற்றும் தேசிய பூங்காக்கள் துறையும் *(Department of Wildlife and National Parks - DWNP)**, மலேசிய காட்டு புலி பாதுகாப்பு ஒருங்கிணைப்பு நிர்வாகமும் *(Malaysian Conservation Alliance for Tigers – MYCAT)*** சேர்ந்து வழங்கும் கூட்டு அறிக்கை.**

***மலாயா புலிகளின் அவல நிலை***

*கோலாலம்பூர், 22 செப்டம்பர் 2014 – மலாயா காடுகளில் உள்ள புலிகளின் நிலை மிக அபாயமான அவலநிலைக்கு குறைந்துவிட்டது.*

*கடந்த 2010 முதல் 2013 வரை நடத்தப்பட்ட ஆய்வின் படி, இந்த புலிகளின் எண்ணிக்கை முன்பு நடத்தப்பட்ட ஆய்வு கணக்கு படி 500 புலிகள் அல்ல என்றும், தற்போதிய நிலை 250ல் இருந்து 340குள் ஆக இருக்கும் என்றும், மூன்று வெவ்வேறு காட்டு நில பகுதிகளில் ஆராய்ந்த வல்லுனர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.*

*உண்மை நிலையைக் கண்டறிய மேலும் பல பகுதிகளில் ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது.*

*இப்புதிய தகவல் அனைத்துலக இயற்கை வன பாதுகாப்பு சங்கத்தின் (International Union for Conservation of Nature - IUCN) பாதுகாக்க பட வேண்டிய வன விலங்குகளின் சிவப்பு அட்டவணையின் (Red List of Threatened Species) அபாய அழிவு நிலை பகுதியின் உட்பிரிவில் வருகிறது.*

*2020க்குள் நமது மலாயா காடுகளில் ஆயிரம் புலிகள் நடமாட வேண்டும் என்று தேசிய புலிகள் பாதுகாப்பு திட்டம் (National Tiger Conservation Action Plan) 2008ல் ஓர் அறிக்கையில் வெளியிட்டது. ஆனால் தற்போதிய நிலை படி இந்த இலக்கை அடைய முடியாது என்பது தெள்ள தெளிவாகிவிட்டது. இதற்கு காரணம் இந்த குறுகிய கால கட்டமே.*

*வழுவான சட்டங்கள் இருந்தும், வன பாதுகாப்பு அதிகாரிகள் வன பகுதிகளை ரோந்து செய்தும், புலிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைய காரணம் சட்ட விரோத நடவடிக்கைகள் என்று தெரிய வருகிறது. புலிகளின் உடல் பாகங்களுக்காக வரையறை இன்றி சட்ட விரோதமாக புலிகள் வேட்டையாடப் படுகிறது. அத்துடன் காடுகள் அழிக்கப் படும் போது புலிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைகிறது, ஏனெனில் புலிகளின் உணவிற்காக பயன் படும் சம்பார் மான்களும் மற்ற விலங்குகளும் அழிந்து விடுகிறன.*

*தீபகற்ப மலேசிய வனவிலங்கு மற்றும் தேசிய பூங்காக்கள் துறை (Department of Wildlife and National Parks - DWNP) மற்றும் மலேசிய காட்டு புலி பாதுகாப்பு ஒருங்கிணைப்பு நிர்வாகமும் (MYCAT) இந்நிலை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளன. இந்த சூழ்நிலையை மாற்றி தகுந்த சட்டதிட்டங்களை ஒரு முகப்படுத்தி, அதில் உள்ள ஓட்டைகளை சரிசெய்ய முயற்சிக்கின்றனர்.*

*இந்த இரு நிருவனங்களும், தேசிய புலிகள் பாதுகாப்பு திட்ட (NTCAP) பங்குதாரர்களுடன் கீழ்கண்ட நடவடிக்கைகளை செயல்படுத்த திட்டமிட்டு இருக்கின்றனர்.*

1. *ஆக்ககரமான புலிகள் பாதுகாப்பு ரோந்து படைகளைக் கொண்டு புலிகள் வசிக்கும் வன பகுதிகளை பாதுகாத்து ஒவ்வோர் புலியையும் அடையாளம் காணவேண்டும். பின் வரும் இடங்களில் நடவடிக்கைகள் செயல்பட வேண்டும். அவைகள் பேலும்-தெமெங்கோர் வன பகுதி, தேசிய காட்டு வனம், என்டாவ்-ரொம்பின் வன பகுதி.*

2. *ஒருங்கிணைக்கப் பட்ட தேசிய அளவிலான புலிகள் சர்வே நடத்தி புலிகளின் எண்ணிக்கை சரிவை கட்டுபடுத்தி, மத்தி மலை தொடர் வன பகுதிகளில் தீவிர நடவடிக்கை எடுத்து. இப்பகுதியில் எஞ்சியுள்ள காடுகள் பாதுகாக்க பட வேண்டும்.*

3. *திறமையான ஓர் ஒருங்கிணைப்பு குழுவை ஏற்படுத்தி, தேசிய அளவிலான புலிகள் பாதுகாப்பு திட்டத்தை திறம்பட செயலாக்க வேண்டும். இவைகள் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆக்ககர செயல் திட்டங்களின் சாராம்சம் படியும் மற்றும் மத்திய மலை தொடர் செயல் திட்ட சாராம்சம் படியும் நிறைவேற்ற பட வேண்டும்.*

*மலேசியாவின் மத்திய அரசும் இந்த நடவடிக்கைகளுக்கு தேவையான நிதி உதவிகளை செய்கின்றது. அத்துடன் மலேசிய காட்டுபுலி பாதுகாப்பு ஒருங்கிணைப்பு நிர்வாகமும் நிறைய நிதியை, நன்கொடை மூலம் பெற்று, மேல் கூறிய திட்டங்களை நிறைவேற்ற தகுந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று கூறினால் மிகையாகாது. இதனால் புலிகளின் வாழ்வியல்புகளை விஞ்ஞானரீதியாக கண்டறிவதுடன், துண்டிக்கபட்டு இருக்கும் காடுகளை ஒன்று சேர்க்கமுடியும்.*

*தேசிய அளவிலான புலிகள் பாதுகாப்புதிட்டத்தையும் மத்திய மலைத்தொடர் காட்டுவள திட்டத்தையும் நிறைவேற்ற மேலும் உதவிகள் தேவைபடுகிறது. எனவே உலக சுற்றுச்சூழல் அமைப்பின் நிதி உதவியும், (Global Environment Facility - GEF), ஐக்கிய நாட்டுசபை வளர்ச்சித் திட்டத்தின் ஆதரவும் (UNDP) மிக அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. இம் மாதிரியான பொருள் உதவியால், மேலே கூறப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக நிறை வேற்றி, மலாயா காட்டு வாழ் புலிகளை பாதுகாத்து சிறப்பாக சேவை செய்ய முடியும்.*

** தீபகற்ப மலேசிய வனவிலங்கு மற்றும் தேசிய பூங்காக்கள் துறை (Department of Wildlife and National Parks - DWNP) ஓர் அரசாங்க அமைப்பு, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைச் சின் கீழ் இயங்குகிறது. இந்த அமைப்பின் முக்கிய செயல்பாடு, வனவிலங்குகள் பாதுகாப்பும், காடுககள் பாதுகாப்பும் ஆகும்.*

*** மலேசிய இயற்கை வன கழகம் (Malaysian Nature Society - MNS), TRAFFIC தென்கிழக்கு ஆசியா, வனவிலங்கு பாதுகாப்பு கழகம் (Wildlife Conservation Society - WCS), மற்றும் WWF-மலேசிய, மலேசிய காட்டு புலி பாதுகாப்பு ஒருங்கிணைப்பின் (MYCAT) பங்குதாரர்கள். DWNP அமைப்பின் ஆதரவால் MYCATடின் கூட்டுடன் தேசிய காட்டு புலி பாதுகாப்பு திட்டம் அமல் படுத்த ப்படுகிறது.*

---

மேல் விபரங்களுக்கு, கீழ் கண்ட நபர்களை தொடர்பு கொள்ளலாம்:

*Nosrat Ravichandran, Director, Consultancy Division, PERHILITAN*
*Tel: 03.9086.6813 (O); Email: nosrat@wildlife.gov.my*

*Wong Pui May, Coordinator, MYCAT Secretariat's Office*
*Tel: 03.7880.3940 (O), 017.682.1006 (M); Email: mycat.so@malayantiger.net*